Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions<br>Prosecution | } | CC.349/2016 |
| Depositions of witness for | | LW1 Examined as PW1 Chief and Cross |

| | | |
|---|---|---|
| Time | : | 03.15 pm - 03.30 pm |
| Name | : | திருமதி.அனுசியா மாலதி |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 06th day of February 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல்விசாரணை

1) தற்போது 4/94 என்ஜிஜிஒ காலணி, 2 வது தெரு, பாகலூர் ரோட்டில் வசித்து வருகிறேன். தற்பொழுது அரசு மருத்துவ துறையில் மருத்துவ கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 23.02.2006 ம் தேதி நானும் எனது கணவரும் ஒரு அறையிலும், எனது 2 பெண் குழந்தைகள் இருவரும் ஒரு அறையிலும், எங்களது வீட்டில் உறங்கி கொண்டிருந்தபோது சுமார் 2.40 மணியளவில் விழித்து பார்த்தபோது நானும்

கணவரும் உறங்கி கொண்டிருந்த கதவு வெளிப்புறமாக தாளிடப்பட்டிருந்தது. எனது 2 பெண் குழந்தைகளை எழுப்புவதற்காக கதவை தட்டி சத்தம் செய்தோம். எனது 2 பெண் குழந்தைகள் எழுந்து வந்து எங்கள் கதவை திறந்து விட்டபோது எங்கள் வீட்டின் முன் வாசல் கதவு திறந்திருந்தது.

2) அதே நேரத்தில் ரோந்தில் இருந்த போலிசாரும், அக்கம் பக்கத்தில்இருந்தவர்களும் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். பொதுவாக சாவியை எங்களது வீட்டில் சன்னலுக்கு அருகில் வைப்பது வழக்கம். ஜன்னல் வழிகாய சாவியை எடுத்து வீட்டை திறந்திருப்பது தெரியவந்தது. அப்போது எங்கள் வீட்டிலிருந்த என்னுடைய அறையில் 2 நோக்கியா செல்போனும், எங்கள் பெண் குழந்தைகளின் அறையில் ஒரு நோக்கியா செல்போனும், 5 கைக்கடிகாரங்களும் காணாமல் போயிருந்தது தெரியவந்தது.

3) ரோந்தில் இருந்த போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அந்த நாள் காலை நான் காவல் நிலையத்திற்கு சென்று சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ஆகும். நான் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பிறகு போலிசார் 4, 5 வருடங்கள் கழித்து காவல் நிலையத்திற்கு அழைத்து சம்பவத்து அன்று எனது வீட்டில் தொலைந்து போன பொருட்களை அடையாளம் காட்டசொன்னார்கள் நான் அடையாளம் காட்டினேன். சம்பவத்திற்கு பிறகுபோலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) நான் புகார் கொடுக்கும்போது செல்போன்களின் மாடல் குறித்தும், செல்போன்களில் இருந்த சிம் கார்டுகளின் நெம்பர்கள் குறித்து மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் கைக்கடிகாரம் Sony மற்றும் Sonata என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எனது வீட்டில் தொலைந்து போன பொருட்களின் ரசீதுகளை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) நான் காவல் நிலையத்தில் தொலைந்து போன பொருட்களை அடையாளம் காட்டும்போது செல்போன்களில் சிம் கார்டு இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. நான் சொல்வது போல் செல்போன்களும், கைக்கடிகாரங்களும் மார்க்கெட்டில் நிறைய உள்ளது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் 4,5 வருடங்கள் கழித்து அடையாளம் காட்டிய செல்போன்கள் மற்றும் கைக்கடிகாரங்களுக்கும் இந்த வழக்கில் சொல்லப்பட்ட

செல்போன்கள் மற்றும் கைக்கடிகாரங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்